தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2040, மாசி 8

2009 பிப்ரவரி 20, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்."

சொற்களை அளவறிந்து உரைத்திடும் தூயவர்கள் அவையிலிருப்போரின் வகையறியும் ஆற்றல் உடையவராயிருப்பின் பிழை நேருமாறு பேச மாட்டார்கள்.

1. முக்கிய பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். (குறுக்கீடுகள்) வினா-விடை நேரத்திற்கு முன்பு எதுவும் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

31—

வேளாண்மை ஆராய்ச்சி மையம்

***57347—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2009 பிப்ரவரி 20

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் வேளாண்மை ஆராய்ச்சி மையமும், வேளாண்மை விரிவாக்க மையமும் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் வேளாண்மை ஆராய்ச்சி மையமும் வேளாண்மை விரிவாக்க மையமும் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் ஆகியோர் நின்றுகொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். வேலூர் மாவட்டமே மிகவும் பின்தங்கிய மாவட்டம். அதிலும் என்னுடைய சோளிங்கர் தொகுதி மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற ஒரு பகுதி. ஆகையால் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் இதை மனதில்கொண்டு- -நம்முடைய தமிழக முதல்வருடைய, டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், குறிப்பாக வேளாண்மைத் துறையிலே பல்வேறு சாதனைகள், தமிழக அரசின் சார்பாகப் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதேபோல, மத்திய அரசில் அன்னை சோனியா காந்தி தலைமையிலும் பட்ஜெட்டிலே பல்வேறு திட்டங்கள் மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்திலே - -சோளிங்கர் தொகுதிக்கு வேண்டியதை வேளாண்மைத் துறையின் சார்பாக செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

2009 பிப்ரவரி 20]

1. முக்கிய பிரச்சினையை வினாக்கள்—விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைதி. வினா-விடை நேரத்திற்கு முன்பாக எதுவும் எடுக்கக்கூடாது என்று விதியில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) வினா-விடை நேரம் முடிந்ததற்குப் பிறகு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்களோ, அதை நான் கேட்கிறேன். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வினா-விடை நேரம் முடிந்ததற்குப் பிறகு என்னவென்று நான் கேட்கிறேன். உட்காருங்கள்.

(உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் தன்னுடைய இருக்கையைவிட்டு எழுந்து வந்து செய்தித்தாள் ஒன்றைக் காண்பித்தார்.)

திரு. டி. ஜெயக்குமார், உங்கள் இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடு) ஜெயக்குமார், என் அனுமதியில்லாமல் பத்திரிகையையெல்லாம் கொண்டு வந்து காண்பிக்கக்கூடாது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என் அனுமதியில்லாமல் பத்திரிகையையெல்லாம் கொண்டு வந்து காண்பிக்கக்கூடாது. என்னுடைய அறையில் கொண்டு வந்து அதைக் காண்பித்திருக்கவேண்டும். நான் அனுமதிக்கமாட்டேன் என்று சொல்லவில்லை. கேள்வி நேரம் முடிந்த பிறகு உங்களுடைய கோரிக்கை என்னவென்று கேட்கிறேன் என்று சொன்ன பிறகும்கூட, நீங்கள் எழுந்து நின்று அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலுள்ள விரிஞ்சிபுரத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம் ஆகியவை நிறுவப்பட்டு விவசாயிகளுக்குத் தேவையான பயிர் சாகுபடி குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலாலத்தூரில் கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் நிறுவப்பட்டு, கரும்பு சம்பந்தப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டு விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி வருகின்றது. மேலும் தமிழ்நாடு

வேளாண்மைப் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்ற ஒரு வேளாண் கல்லூரியும் வேலூர் மாவட்டம், கலவையில் செயல்பட்டு வருகிறது.

காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் காவேரிப்பாக்கத்தில் ஒரு முதன்மை வேளாண்மை விரிவாக்க மையமும், பானாவரத்தில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும், பாராஞ்சியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும் செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில், சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் வேளாண்மை ஆராய்ச்சி மையமும், வேளாண்மை விரிவாக்க மையமும் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. *(குறுக்கீடுகள்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டு அவையிலிருந்து வெளியேறினர்.)

1. முக்கிய பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ.க. மணி, வினா-விடை நேரத்திற்கு முன்பு எதுவும் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. அது விதியில் இருக்கக்கூடியது. வினா-விடை நேரம் முடிந்ததற்குப் பிறகு நான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னதற்குப் பிறகும் நீங்கள் எழுந்து நின்று அவையினுடைய நடவடிக்கைக்கு இடையூறு பண்ணுவது முறையல்ல. *(குறுக்கீடுகள்)*

2. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 32,* மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

(பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் நின்றுகொண்டிருந்தனர்.)